செ. வெ. எண். 153 நாள். 7.3.2013

# செய்தி வெளியீடு

நெடுஞ்சாலைத்துறையின் தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பகுதியில் பெருகி வரும் தொழிற்சாலைகளுக்கு தேவையான சாலை மற்றும் பாலக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் ஒரகடம் தொழிற்பூங்கா சாலை மேம்பாட்டுத் திட்டம் ரூ. 462 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிங்கபெருமாள் கோவில் – திருப்பெரும்புதூர் சாலை 24.60 கி.மீ. நீளமாகும். வண்டலூர் – வாலாஜாபாத் சாலை 33.40 கி.மீ நீளமாகும். இந்த இரு சாலைகளையும் நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும்பணி நடைபெற்றுவருகிறது. 43 கிராமங்களில் நிலஎடுப்பு செய்வதற்காக ரூ. 184 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 27 கிராமங்களில் நிலஎடுப்பு பணிகள் முடிவுற்றுள்ளது.

சிங்கபெருமாள் கோவில் – ஒரகடம் சந்திப்பு மற்றும் வண்டலூர் – ஒரகடம் சந்திப்பு சாலையில் உள்ள வனத்துறையின் 21 ஹேக்டர் நிலத்தில், 5 கி.மீ நீளச்சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி அமைப்பதற்கு துரித நடைவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதுவரை 42 கி.மீ நீளம் சாலையினை அகலப்படுத்தி மேம்படுத்துதல் பணி முடிவுற்றுள்ளது.

ஒரகடம் சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி ரூ. 21 கோடி மதிப்பீட்டில் நடைப்பெற்று வருவதை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது கால்நடைபராமரிப்புத்துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா, சட்டமன்ற உறுப்பினர்கள் வாலாஜாபாத் கணேசன், பெருமாள், தண்டரை மனோகரன், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையின் முதன்மைச் செயலாளர், தலைமைப் பொறியாளர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் நடைபெற்றுவரும் பணிகளை துரிதப்படுத்தி விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**